# சிவப்பிரகாசர் சிந்தனையில் சங்கப் பாடல்கள்

**உ. சிவசுப்ரமணியன்**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் ஆய்வு மையம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

### முன்னுரை

சிவப்பிரகாசர் படைப்புகள் பக்தி இலக்கியம் முதலிய பல மரபுகளைப் பின்பற்றியுள்ள பாங்கில் அமைகின்றன் பல்வேறு இலக்கியங்களை உள்வாங்கிக் கற்பனை விரவி யமைகின்றன. அவர் படைப்பில் விருந்து இட்டதை,

**உளங்கனி மூவர் செய்யுள் ஒத்த**
**முக்கனியும் ஏனோர்**
**வளங்கெழு தொடர்பு போலும்**
**அமுதம் அடியார்க்கு அளித்ததை**

**(பிரபுலிங்கலீலை ஆரோகண கதி - செ.36)**

என்ற தொடர் வெளிப்படுத்துகிறது. இப்பாடல் பக்தி இலக்கியங்கள் பற்றி குறிப்பாக மூவர் தேவாரம் பற்றியுரைக்கின்றது. நீதி, பக்தி, சங்க இலக்கியம் என இயன்றவாறெல்லாம் சிவப்பிரகாசர் முன்னோர் மொழி பொன்போல் போற்றும் மரபு காணப்படுகிறது. இக்கட்டுரையில் புலமைவளம், சோணசைல மாலையில் அகமரபுகள், வாழ்வியல் நெறி, நன்னெறியில் பொறைநிலை, பக்திப் பனுவலில் பொறை நிலை, சங்க இலக்கியச் செல்வாக்கின் பயன், இல்லற நெறி, சங்ககாலப் புறப்பொருள் மரபு, முடிவுரை ஆகியவை தலைப்புகளாக அமைகின்றன.

### புலமை வலம்

சிவப்பிரகாசரது புலமை நலமும், செய்யுள் வளமும் கற்பனைக் களஞ்சியமாகத் திகழ்கின்றன. எனக்குப் பிறவி வேண்டும். சொல் மலர் நினைக்கணியும் பிறவி வேண்டுவன் என்றே அவர் மொழி தலைக்கூறுவர். வண்புலவர் நம்மை விழி காக்கும் சீருடையான் (உலா - 55-56) என்றார் அவர். செய்யுள் சொல்லடுக்கைக் கல்லடுக்கிய கோயிலுடன் ஒத்து இருப்பதை அவர்தாம் சிந்தித்தார். அவர் சந்தி பொருந்தித் தகும்சீர் கெடாதடுக்கிப் புந்தி மகிழற்புத அணித்தா (மேலது-66-67) என்று எழுதினார்.

**மாணிக்க வாசகன் புகன்ற மதுர வாசகம்**
**யாவரும் ஓதும் இயற்கைத் தாதலின்**
**பொற்கலம் நிகர்க்கும் பூசுரர் நான்மறை**
**மட்கலம் நிகர்க்கும் (நால்வர் நான்மணி மாலை)**

தமிழ்ப்புலவர்களின் புலமை, நலம் மேலோங்கிய தமிழ்ப்பனுவல்களால் அவர் ஆட்பட்டார். வடமொழி வேதம் அறியினும் தமிழ்ப்புலமை அவர்க்கு நனி விருப்பம் ஆயிற்று. புலவர்க்கு வளமானது சொல்வளம். (உலா : 55-56 - உரை பக்.72) சங்கப் பாடல்களின் நல்வளமும் அவரில் தாக்கம் தந்ததால்

சங்க இலக்கியச் செல்வாக்கு அவருடைய படைப்பில் காணப்படுகிறது. சங்கப் படைப்புகளைப் பொய்க்கற்பனை கலவாதவை நவில்தொறும் நயமிகப் பயக்கும் நன்மைமிக்கவை. (சிவப்பிரகாசரின் சமயவழிச் சிந்தனைகள் ப.102) என்று மொழிந்த தகுதியது என்றறிய வேண்டும்.

சிவனுக்கும் தமிழ் விருப்பமான மொழி. சிவனைப் போற்றிப் பற்றியதும், தமிழில் பற்றுடன் போற்றியதும் அவரது இயல்பு. அவரது படைப்பில்,

**படியிலா நின்பாட்டில் ஆரூர**
**நனிவிருப்பன் பரமன் என்பது**
**அடியனேன் அறிந்தனன் (நா.நா.ம.மா.3)**

என்றும் மொழிகிறார்.

**சோணசைல மாலையில் அகமரபு**

சோணசைல மாலையைப் படைத்த சிவப்பிரகாசர் திருவண்ணாமலை இறைவனை வணங்கும்போது பக்தி நிலையில் இருந்து அருளினார். இந்நூலில் அகமரபு கூறினும் தன்னிலை வழாமல் படைத்தார். அவருக்கு ஆன்மீகமே ஏற்புடையது.

**இந்தியங் கரணம் உடலம் வேறாக்கி**
**இருள்மலப் படலமும் கீறி**
**கந்தமும் மலரும் எனநினை என்னில்**
**காண்பறக் காணுநாள் உளதோ (மேற்கோள் சோணசைலமாலை ஆய்வு. ப.133)**

இறைவனை அகப்பொருட்சுவையுடன் பாடியருளினார். பக்திப் பனுவலில் அகப்பொருட் சுவைக்கு இடம் ஏது? ஆனால் சுவாமிகள் உமையோடு சேர்த்து இறைவனைப் பாடும் இடங்கள் சிலவற்றில் அகப்பொருட்கள் சுவையுடனும் பாடல்களை இயற்றியுள்ளார்கள். (மேலது. ப.88)

**கோவையில் அகமரபு**

திருவெங்கைக் கோவை சிவப்பிரகாசரின் இன்னோர் அருட்கொடை.
திருவெங்கைக் கோவையில்

**பெட்டுப் பட்டாவுரிகொண்டோன் தன்வெங்கைப் பிரான்வரையில்**
**மட்டுப்பட்டு ஆன மலர்வாரிச முகவல்லி முகை**
**ஒட்டுப்பட்டு ஆனை அனையான் இடைஎனும் ஓரிழையால்**
**கட்டப்பட்டான் இனி என்செய்குவேன் இந்தக் காசினிக்கே (செ.49)**

என்ற வரிகள் அடிகளின் வாக்கு என்று மொழியப்பெறுகிறது.

**அந்தாதியில் அக மரபுகள்**

பழமலை நாதர் மீது அருளப்பட்ட சிவப்பிரகாசரது பழமலை அந்தாதியும் சிற்றிலக்கிய உலகில் கொடையாகியது. இப்படைப்பு இனிமை உடையது. பழமலை நாதரும் இனியர், பழமலை இனிது, பழமலை அந்தாதியும் இனிப்புப் படைப்பாக உள்ளது.

செங்கரும்பால் ஏர்அதங்கோட்டு வயல்சூழ் முதுகுன்று
என்னும் தொடர் உழவரும். அவர்தம் கலப்பைக் கருவியும் பற்றியது.

**பள்ளருழும்போது சிவந்த கரும்பாகிய**
**தாற்றுக் கோலினார் ஏரும் படையானமை”**

வில்லேருழவர் சிறப்பைக் கூறித் தொடங்கும் படைப்பாக உள்ளது. முடிவில் (100ஆம் பாட்டினில்) மலை மாது விழிகளிக்கும் நிருத்தா! மலைமாதின் விழி களித்து மகிழ நடமிடும் சுவையும் காட்டி இனிக்கும் அகமரபு தோய் இன்ப, பேரின்ப, இலக்கிய இன்பமாக அமைகிறது. களவியல், கற்பியல் வகுத்ததாயமைகிறது.

**தெய்வ சிகாமணியே கூடலிற் சென்று விற்ற**
**மெய்வசிகா! மணிகண்டா! பழமலை வித்தக!**

என்ற பாட்டில் உடன் போக்கில் தலைமகளைக் கையிடைக் கொடுத்து தலைவனுக்கு ஓம்படைச் சாற்றல் எனும் அகமரபு இடம் பெற்றது. (பழமலை அந்தாதி - பழ.58)

**ஓம்படைக்கிளவிப் பாங்கின் கண்ணும் (தொல். பொருள் நூ.112)**
என்பது தொல்காப்பியம். இறைவியை மறவாது அடியேனையும் பாதுகாத்தல் மறவாது பிரியாது வாழென்று ஓம்படைக் கிளவியாகப் பாடலமைத்தது, இங்கு முன்னூற்பயிற்சி, தம்காலச் சூழல், வாழுமிடம் பாடுபொருட்டு ஏற்ப வெளிப்படுத்தும் (சோண சைல மாலை, பக். 73-74) கற்பனை பற்றிய (ச.வே.சு. கருத்துரை) படைப்பாக விளக்கமாகிறது. சங்கப்பாடலுள் ஓம்படைக்கிளவி இயல்பு.

ஒருவழித் தணத்தல் நிகழும்போது நன்மலை நாட நின்னது அலது இலளே (மேற்கோள் குறுந். 115) என்ற சங்க இலக்கியத்தின் தாக்கம் சிவப்பிரகாசரிடம் வெளிப்படுகிறது.

**வாழ்வியல் நெறி**

புறப்பொருளியல்பில் விரிந்த சிவப்பிரகாசரது படைப்புகளுள் அறநெறிச் சிந்தனைகளும், பக்தி இயல் படைப்புகளும் எனத் தொட்ட துறைதோறும் வாழ்வியல் நெறி விளங்குகிறது. சங்க இலக்கியப் படைப்புகளைத் தழுவிய அவர் படைப்புகளுள் வாழ்வியல் நெறியை வெளிப்படுத்தும் களம் அமைகிறது. இங்கு பொறை ஈகை., விருந்து ஆகிய புறப்பொருண்மைகளை வெளிப்படுத்துகின்றன.

**நன்னெறியில் பொறை நிலை**

சிவப்பிரகாசர்க்குப் பொறுத்துக்கொள்ளும் பண்பை சிவனியல்பு ஊட்டியது. சிவன் சாக்கியர் எறிந்த கல்லைப் பூசையால் ஏற்றவன். ஈசற்கு நல்லோன் எறிசிலை (நன்னெறி -2) இனிதாகவே இருந்தது.

**உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்குசினம் காத்துக்**
**கொள்ளும் குணமே குணமென்க.**

என்ற நன்னெறியில் (மேலது - 8) பொறை விளங்குகிறது. பொறுமைசாலியே திறமைசாலி யாவான் பொறுத்தல் மனஉறுதியின் வெளிப்பாடு சங்க இலக்கியம், பொறுத்துக் கொள்வதை, பேதையர் சொல் நோன்றல் பொறை (கலி-133) என்கிறது. அவர் சங்க இலக்கியத்தைப் போலவே நன்னெறி வழி படைத்தருளினார்.

**பக்திப் பனுவலில் பொறைநிலை**

தோத்திர, சாத்திர, தத்துவ நூல்கள் படைத்தருளியவர் சிவப்பிரகாசர். அவருடைய பக்தி இலக்கியப் படைப்பிள் ஊடல் (பெரியநாயகியம்மை கலித்துறை, -பாடல் 10) கூடல் (மேலது 5) இரண்டும் உள்ளன.

**உப்பமைந்தற்றால் என்பர் ஊடலை**
**சினமிருப்பினும் குணம் இருக்கும்படி**
**ஊடலை விடுத்துக் கூடலை, குணமாக் கொண்டு**

இறைவனை, இறைவி மன்னித்தல் வழி பொறை இயல்பைக் காட்டுகிறார் சிவப்பிரகாசர்.

**இழை பொறுத்தால் பொறைதான் என்பரால்**
**நல்லிசைப் புலவர்**
**மழை பொறுத்தார் புனல்முக்காற்**
**பொறுக்கும் வழக்கதுண்டே**
**உழை பொறுத்தார் நல்லியற்கையார்**
**மனைக்கு உற்றவொரு**
**பிழை பொறுத்தாய் நன்று காண்**
**குன்றை வாழும் பெரியம்மையே (மேலது. செ. 3)**

இங்கு இயற்பகை நாயனாரிடம் அவரது மனைவியைக் கேட்ட சிவனின் இயல்பைப் பொறுத்துக் கருணைக் கனிவுடன் குணம் பெருக்கும் பக்குவமாம் மன்னித்தல் விளங்குகிறது.

சங்கப் பனுவலும் வள்ளுவப் பொருண்மையும், பொருந்துமாறு பாடல் அமைத்தார் சிவப்பிரகாசர். சங்க இலக்கியச் செல்வாக்கின் பயன் சிவப்பிரகாசர் சோணசைலமாலை திருவெங்கைக் கோவை, அந்தாதி, நன்னெறி, பெரியநாயகியம்மைக் கலித்துறை ஆகிய நூல்களில், அகமரபுகள், புறப்பொருள்

மரபுகள் என வைத்தார். பக்திப் பனுவல்களையே பாடியருளினும் சிவப்பிரகாசர் அகமரபுகளைக் கையாள்வதும், தவிர்க்கவில்லை. சங்க இலக்கியப் பனுவல்களின் தாக்கமும் செல்வாக்கும் தந்த பயனாக இவ்வாறு படைத்தமை அமைகிறது. அவர் களவியல், கற்பியல், இயற்கைப் புணர்ச்சி முதலிய கூறுகளைப் படைத்துள்ளார். ஆயினும் சிவப்பிரகாசர் இயல்பும், அவரது வழிபடு கடவுள் பாங்கும், சங்கமர் (அடியார்) பண்பும் புலனாகின்றன. தம்மளவில் இறைமை, ஆன்மீக இயல்பு, பக்தி விழைவில் நிலைக்கின்றனர் என்று கூறவியல்கிறது.

**மெய்த்தவர் அடிக்குற்றேவலின் திறத்தும்**
**விளங்கும் ஆகம உணர்ச்சியினும்**
**புத்தலர் கொடுநின் பரவு பூசையினும்**
**பொழுது போக்க எனக்கருள் புரிவாய். (சோணசைல மாலை-29)**
**விருப்பொடு வெறுப்பும் அகன்று பேரின்ப**
**வெள்ளத்துள் அழுந்தும் நின்னடியார்**
**அளவிளாது இடையறாக் கருணை பொழிவாய் (மேலது-33)**

ஆகியன அவரவர் இயல்பைச் சுட்டுவனவாயுள்ளன. சங்க அகமரபுகளும், புற மரபுகளும் செய்த தாக்கம் பதிவுகளைத் தந்தாலும் தம் அளவில் சிவப்பிரகாசரது செந்நெறி, பக்திமை கமழ்வதாகவே அமைந்துள்ளன.

**இல்லற நெறி**

இல்லறமல்லது நல்லறமன்று என்பர். திருமண வாழ்த்துக்களைக் கவிதையாக்கித் தம் இளையோரை மணம் புரிவித்தவர் சிவப்பிரகாசர். யாவரும் பேருவகை கொள்ளும்படித் திருமண வாழ்த்தாக ஐந்து பாடல்களைப் பாடியருளினார். இவை பாவடிவில் அமைந்த திருமண வாழ்த்து வகையில் முதலானவை என்று அறிஞர்களால் போற்றப் பெறுகின்றன. (செந்தமிழ் நூல்கள் : ப.53) என்பது உறுதி செய்கிறது.

இல்லறத்தில் 1) விட்டுக் கொடுத்தல். 2) ஆதரவு பெற்றிருத்தல். 3) அன்பு ஒழுகுதல். 4) மாறின்றி ஒத்து வாழ்தல் ஆகியன சங்கப் பனுவல்களில் உள்ளவாறு சிவப்பிரகாசர் படைப்பிலும் காணக்கிடக்கின்றன. சங்க இலக்கியத்தை உள்வாங்கிய அளவு ஆய்ந்தும், நுகர்ந்தும், படைத்து அருளினார் அவர்.

ஆராயும் திறன் குறைவாக இருந்தாலும், கவலை இல்லை நுகரும் திறன் நிரம்பப் பெற்றால் இலக்கியம் படைக்கலாம் சுவைபட எழுதலாம் (மு.வ.ஆய்வடங்கல், ப.200) என்ற கூற்றிருப்பினும் நுகர்ந்த திறனும் ஆராயும் திறனும் நிரம்ப உள்ளவராய் சுவைப்பட படைத்திட முடிந்தவராய் சிவப்பிரகாசர் விளங்குகிறார். நன்னெறியில், அன்பு இல்லறத்தைக் காட்டுகிறார்.

**காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்**
**தீதிலொரு கருமம் செய்யவே - ஓதுகலை**
**எண்ணிரண்டும் ஒன்றும்மதிஎன் முகத்தாய் நோக்கல்தான்**
**கண்ணிரண்டும் ஒன்றையே காண். (நன்னெறி. 16)**

அன்பும் வீரமும் பொருளிலக்கண நெறிகள் காதலாகிய அன்பினை மேற்பாடல் சுட்டுகிறது. இல்லற அன்பின் வளர்ச்சியே சமூகப்பற்றாக வளர அடிப்படை அமைப்பது அகமும் புறமும் பின்னிப் பிணைகிறது.

**சங்ககாலப் புறப்பொருள் மரபு**

சுற்றந்தழுவல், ஈகை, வீரம், கொண்ட இன்ன புறப்பொருள் மரபுகள், சிவப்பிரகாசர் நன்னெறி நூலில், ஈகை, உதவி, அறம். விருந்து முதலானவற்றை வைத்தருளினார்.

உதவுக (நன்னெறி 1), அன்பின் உதவுக (13), கைம்மாறு கருதாது உதவுக (27), இடுக்கண் அஞ்சாது உதவுக (29), மெய்யுணர்ந்து உதவுக (32) / தக்கார்க்கே உதவுக (36), வறுமையிலும் உதவி (17), வெறுப்பிலும் மேலோர் உதவுவர் (28), செல்வத்துப் பயன் ஈதலே (4), அன்பிலார் செல்வம் பயனிலை (15).
என்றெலாம் கூறினார்.

சங்க இலக்கியங்களில் ஒரு நாள் செல்லினும்.. தலைநாள் போன்ற விருப்பினனாகி பலரோடு பலநாள் செல்லினும் உதவி விருந்துபசரிக்கும் மன்னனை விருந்து இயல்பைக் (புறம் 101) காணமுடிகிறது.

**தான் நின்று ஊட்டி (சிறுபாண். 245)**
**விருந்து உண்டு எஞ்சிய மிச்சம் (குறிஞ்சி 206)**
**அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும் (நற். 71)**

ஆகியவை போல்வனவற்றுள் ஈகை விருந்து புரத்தல் காணப்படுகிறது.

**முடிவுரை**

1. சிவப்பிரகாசர் தம்படைப்புகளில் முன்னோர் மொழி பொருளைப் போற்றி படைப்புகளையும், படைப்பாளர்களையும் ஏற்றிப் போற்றியமைகிறார்.
2. அவரது தமிழ்மொழிப்பற்று, சங்கப் பனுவல் முதலியன முன்னோர் படைப்புகளின் ஈர்ப்பும், படைப்பாளர் புலமையும் கண்டு ஏற்பட்டது சிவனுக்கும் தமிழ்மேல் விழைவுண்டு சிவன்மேல் பற்றுள்ள சிவப்பிரகாசர்க்குப் பிறமொழி வேதத்தினும் தமிழ் சிறந்தது என்ற எண்ணம் உண்டு.
3. அகப்பொருள் மரபுடன், புறப்பொருள் மரபுகளையும் சிவப்பிரகாசர் இலக்கியங்களில் காணலாகிறது.
4. அவர் சோணசைலமாலை முதலிய படைப்புகளில் அவற்றைப் பதிந்து வைத்துள்ளார்.
5. அவர் ஓம்படை சாற்றல் முதலிய (அகமரபுகளும்) பொறை முதலியவற்றை (புற மரபுகளை) தம் மனநிலை வழாது பாடுகிறார்.
6. இறைஅடியார், தம்நிலையயை ஆன்மீக நிலையிலேயே உள்ளவாறு படைத்துக் காட்டுகிறார்.
7. அவர் இல்லற இயல்பு, ஈகை, விருந்து என்பவற்றை வெளிப்படுத்துகிறார்.

**பயன்பட்ட நூல்கள்**

1. அடிகளாசிரியர் (உ.ஆ), பிரபுலிங்க லீலை
2. ஆ.சிவலிங்கனார் (உ.ஆ), ஸ்ரீமத் சி.பா.சு.உலா
3. ந.குப்பன் (ப.ஆ), நால்வர் நான்மணிமாலை
4. ஆய்வு நூல், சோணசைலமாலை
5. திருவெங்கைக்கோவை
6. பழமலை அந்தாதி
7. நன்னெறி
8. கலித்தொகை
9. பெரியநாயகியம்மைக் கலித்துறை
10. திருக்குறள், பரிமேலழகர் (உ.ஆ)
11. சிவப்பிரகாசர் செ.நூல்கள் தொகுதி 1, 2 - குமாரசிவ இராசேந்திரன் (ப.ஆ)
12. மு.வ.ஆய்வடங்கல்
13. காலந்தோறும் தமிழ் தொகுதி 1
14. புறநானூறு,
15. பொருநராற்றுப்படை
16. நற்றிணை